செ.வெ.எண்:39 நாள்:29.12.2019

**தூத்துக்குடி மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறும் வாக்குச்சாவடி மையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் மற்றும் பொருட்களை வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

---

தூத்துக்குடி மாவட்டத்தில் இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெறும் வாக்குச்சாவடி மையங்களுக்கு ஊரக உள்ளாட்சி தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குப்பெட்டி மற்றும் பொருட்களை அனுப்பி வைக்கும் பணிகளை இன்று (29.12.2019) மாவட்ட ஆட்சித்தலைவர்/ மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வாக்குச்சாவடியில் பணியாற்றும் அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர்/ மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் புதியம்புத்தூர், ஜான் டி.பெப்டிஸ் மேல்நிலைப்பள்ளியில் பார்வையிட்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவு படி இரண்டு கட்டங்களாக ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று வருகிறது. நமது மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் 12 ஊராட்சி ஒன்றியங்களில், முதல் கட்டமாக 7 ஊராட்சி ஒன்றியங்களில் 27.12.2019 அன்று வாக்குப்பதிவு நடைபெற்றது. இரண்டாம் கட்டமாக நாளை (30.12.2019) 5 ஊராட்சி ஒன்றியங்களில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. மேலும், நாளை நடைபெறும் 5 ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வாக்குச்சாவடியில் பணியாற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் எந்த வாக்குச்சாவடியில் பணியாற்ற வேண்டும் என்பதற்கான உத்தரவு வழங்கும் பணிகளும் இன்று நடைபெற்று வருகிறது. மேலும், 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலிருந்து வாக்குச்சாவடி மையங்களுக்கு மண்டல அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் மூலம் தேவையான வாக்குப்பெட்டி மற்றும் இதர பொருட்கள் சரிபார்க்கப்பட்டு அனுப்பி வைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக நடைபெறும் ஊரக உள்ளாட்சி தேர்தலில் பதற்றமான வாக்குச்சாவடிகள் மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகள் என மொத்தம் 170 வாக்குச்சாவடி மையங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 80 வாக்குச்சாவடி மையங்களில் நுண் பார்வையாளர்கள் மூலமும், பிற வாக்குச்சாவடி மையங்களில் வெப் கேமரா அல்லது வீடியோ கவரேஜ் மூலம் கண்காணிப்பு பணிகள் நடைபெற உள்ளது. தொடர்ந்து பதற்றமான வாக்குச்சாவடிகளில் சட்ட ஒழுங்கு பிரச்சனைகளை ஏற்படாத வகையில் வருவாய்த்துறை அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதல்கட்ட வாக்குப்பதிவின் போது சுமார் 2200 காவல்துறையினர் பல்வேறு பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இரண்டபம் கட்டமாக நடைபெறும் தேர்தலில் சுமார் 2300 காவல்துறையினர் பல்வே பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். வாக்குப்பதிவு நிறைவடைந்த பின்பு மண்டல அலுவலர்கள் மூலம் வாக்குப்பெட்டி மற்றும் இதர பொருட்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு பாதுகாப்பாக எடுத்துச் சென்று காப்பறையில் (ஸ்ட்ராங் ரூம்) வைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் மையத்தில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறைகளை கண்காணிக்க வெப் கேமரா, சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்றுள்ள 7 ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வாக்குப்பெட்டிகள் அனைத்தும் முழு பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடத்திற்கு கொண்டு சென்று, வேட்பாளர்கள் முன்னிலையில் காப்புஅறையில் வைத்து சீல் வைக்கப்பட்டுள்ளது. மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுபடி சிசிடி.வி கேமரா மற்றும் காவல்துறை அலுவலர்கள் மூலம் 24 மணி நேரமும் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இங்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையிலான குழுவும் பாதுகாப்பிற்கு உள்ளது. வேட்பாளர்கள் எந்த நேரமும் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு சென்று பார்வையிடலாம். முதற்கட்டமாக நடைபெற்ற தேர்தலில் சாத்தான்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட நெடுங்குளம் ஊராட்சியில் வேலவன் புதுக்குளம் வாக்குச்சாவடியில் மறு வாக்குப்பதிவு நாளை நடைபெற உள்ளது. இந்த பகுதியில் வாக்குப்பதிவின் போது கூடுதலான காவல் பாதுகாப்பும், வீடியோ கண்காணிப்பு பணிகளும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின் போது, துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.சங்கரநாரயணன், உதவி ஆணையர் (கலால்) திரு.சுகுமார் ஓட்டப்பிடாரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ஹெலன் மற்றும் திருமதி.வளர்மதி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.